**செ.வெ.எண்: 66** **நாள்: 25.01.2017**

**புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திற்குட்பட்ட வறட்சி பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை மத்திய வறட்சிக்குழு நேரில் பார்வையிட்டு ஆய்வு - வறட்சி நிவாரணம் குறித்து ஆய்வு அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும் - மத்திய வறட்சிக்குழு தகவல்**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திற்குட்பட்ட பள்ளத்திவயல், கொண்ணமடை டேங்க், பெருங்காடு, ஏகணிவயல், ஏகப்பெருமாளூர் ஆகிய பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வேளாண் இயக்குநர் திரு.தெட்சிணாமூர்த்தி,இ.ஆ.ப., அவர்கள், மத்திய ஊரக சார்புச்செயலாளர் திரு.எஸ்.பி.திவாரி அவர்கள், காவேரி மற்றும் தென்னக நீர்ப்பாசன இயக்குநர் (கண்காணிப்பு) திரு.ஆர்.அழகேசன் அவர்கள் ஆகியோர் வறட்சி பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்த பின்பு தெரிவித்ததாவது:

தமிழகத்தில் அக்டோபர் முதல் டிசம்பர் வரையுள்ள வடகிழக்கு பருவமழைக்காலத்தில் நடப்பாண்டில் சராசரி மழையை விட குறைவாகவே கிடைக்கப்பெற்றுள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் வறட்சியான சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் தமிழகஅரசு அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி பாதித்த இடங்களை நேரடியாக ஆய்வு மேற்கொண்டு தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, மத்திய அரசு இந்த கோரிக்கையினை உடனே ஏற்று 10 நபர்கள் கொண்ட உறுப்பினர்களை நியமித்து, 4 குழுக்களாக தமிழகத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பாதிப்பு குறித்து அறிக்கை அளிக்குமாறு அறிவுறுத்தியதன் அடிப்படையில் நேற்று தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் வறட்சி பாதிப்பு விபரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று (25.01.2017) புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயம் பாதித்த பகுதிகளில் விவசாய நிலங்களை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களிடமிருந்து சேதமதிப்பு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 1.65 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு இருந்தது. இதில் வறட்சியால் விவசாயம் பாதித்த பகுதிகளில் விவசாய நிலங்களின் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியினால் ஏற்பட்ட சேதம் குறித்த முழுவிபரத்தினையும் அறிக்கையாக தயார் செய்து ஒரு வாரத்திற்குள் மத்திய அரசிடம் சமர்ப்பிப்படவுள்ளது. இந்த ஆய்வில் விவசாயப்பயிர் மட்டுமின்றி கரும்பு, பருப்பு, சோளம், கடலை உட்பட அனைத்து விவசாயப்பயிர்களின் சேதவிபரங்கள் மற்றும் ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் ஆகியவற்றின் தூர்வாறும் பணிகள் மேற்கொள்வதற்கான திட்ட வரைவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் ஆய்வுக்குழுவினர் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி (அறந்தாங்கி), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.அண்ணாமலை, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரம்யாதேவி, உதவி இயக்குநர் (வேளாண்மை) திரு.சக்திவேல், வட்டாட்சியர் திருமதி.பரணி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பொய்யாமொழி, ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.பெரியசாமி, திரு.செல்லக்கண்ணு, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**